Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.
வி ஆவணி 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது | தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞூ ஐப்பசிமீ ௩உ வெள்ளிக்கிழமை (19 October 1962) [இல-உஅ]

உலகியல் அலை

# அரிசிப்பங்கீட்டுப்புத்தகத்தானம்

—:0:—

## சுதந்திரக் கட்சியினர் மட்டும் செய்தாற் போதுமே!!

சுற்றிச்சுற்றிச் சுப்பரின் கொல்லைக்குள் என்ற மாதிரித் திரும்பித் திரும்பி அந்த அரிசியிலேயே ஆட்சியாளருக்குக் கண்ணுயிருக்கிறது. சாம பேத தான தண்டம் என்ற நால் வகைத் தந்திரங்களையும் பயன்படுத்தியாவது பிடித்த பிடியை விடாமல் நிற்பதில் அரசாங்கம் உறுதிகொண்டிருக்கிறது.

சட்டம் இடவில்லை, கட்டாயப்படுத்தவில்லை, கண்ணியமாகப் பங்கீட்டுப் புத்தகங்களைத் தானஞ்செய்துவிடுங்கள் என்று சுதந்திரக் கட்சி அரசாங்கம் சொல்லுகிறது. மிகவும நல்லது. பெரும்பான்மையான இந்தக் கட்சியே அரிசித் தானத்தைச் செய்துவிடலாமே. எழுபது மக்கள் சபைப் பிரதிநிதிகள், இருபது மேற்சபை அங்கத்தவர்கள், பன்னூற்றுக் கணக்கான உள்ளூர்ஆட்சி மன்ற அங்கத்தத் வர்கள் இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆதரவாளர்கள் இத்தனை பேருந் தானஞ் செய்த பின்பு நிலைமையைப் பார்த்து மற்றையோரும் பழகலாமல்லவா?

தானத்தால் தனஞ் சேர்த்துத் தனி ஆட்சி நடத்தும் சுதந்திரக் கட்சியின் மானத்தை அரசியல் வரலாறு பொன்னெழுத்துக்களாற் பொறிக்கவேண்டும். சட்டங்கள் தேவையில்லை. தயவுதான் தேவை.

## நற் சிந்தனை

ஞான யோகம்
நாங்கள் புரிந்தால்
மோனவீ டடைவோம்
மூழுது முண்மையே.

### யாழ்நகரில் தேரோட்டிமகன்

பிரபல தென்னிந்திய எழுத்தாளர் பி. எஸ். இராமையா அவர்களால் எழுதப்பெற்ற தேரோட்டி மகன் என்னும் நாடகத்தை கிழைநாட்டு விளையாட்டு வளர்ச்சி நுண்கலைச் சங்கத்தினர், யாழ் பிரதேச கலாமன்றத்தின் ஆதரவின்கீழ் யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் மேடையேற்றவிருக்கின்றனர்.

நாடகம் நாளை 20-10-62 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாகுமென அறியப்படுகின்றது.

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்றும்
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்றும்
நெற்றிமேற்கண்தோன்றும்பெற்றந்தோன்றும்
மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்றும்
மலைமகளுஞ்சலமகளும்மலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிறிகளும்பூவணத்தெம்புனிதனர்க்கே.

x x x

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## சிவமும் சைவமும்

இவ்வுலகம் தோன்றி நின்று அழியுந் தன்மையது, தோன்றிய யாவும் அழியுந் தன்மைத்தே! அதனால், காரியம் என்பது எதுவும் ஒரு காரணமுடைத்து என்பர். அறிஞர்கள் ஆய்ந்து முற்றவும் புலப்படாத முழுமுதல்வரே உலகமும் பல்லுயிரும் சிறக்க அருள்பவராவர் என்றார். பிறந்திறக்குந் தன்மை நீங்கிய இறைவர் சிவபெருமானே! பிறந்திறக்கும்பெற்றியுடையவரே கடவுளென்பாருமுளர், சிவமே நாம் வழிபடு கடவுள். சி - சிவம்; வ - சத்தி. இப்படியும் பொருள்படும். மங்கலகர

தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவரஐயர்

முடையது இரண்டெழுத்தொருபதம். சிவ என்பதைக் கூறக் கூசுவோரும், விபூதி, உருத்திராக்கம் ஆகிய சிவ சின்னங்களை அணியக் கூசுவோரும் அரிய மக்கட் பிறப்பின் பயனை அடைய மாட்டார்கள்.

"சிவசிவ என்றிடத் தீவினை மாளும்'' என்பர் திருமூல அடிகள், சைவஞ் சிவனொடு சம்பந்தமாவது. இதனை மறுத்துத்தேவாராதிகளைத் திருத்த முன்வருவார் மதிதானென்னே! சிவ சப்தம் சகல பாபங்களையும் போக்கும். சிவ என்பது வடமொழி. அதில் வெறுப்புற்றோர் "அருள்நெறி என்பர். அருள் பாலிப்பவர் யாவரோ? நாகரிகம் சமயம் என்பர் மற்றொரு சாரார். கல்வியின் வலி பெரிதுபோலும்!

"கங்கைவார் சடைக்கரந் தார்க் கன்பராகில்" என்ற தேவாரவரியை,செந்தமிழ்க் கன்பராகில் என்றார் ஒருவர். மற்றொருவர் 'மேன்மைகொள் சைவநீதி'' என்பதை "மேன்மைகொள் தெய்வநீதி" என்றார். சைவசீலர்களே!

"சைவத்தின்மேற்சமயம் வேறில்லை. அதிற்சார் சிவமாந் தெய்வத்தின் மேற் றெய்வமில்லை. இதனையே ஆறுமுகநாவலர்பெருமான் நன்கு காட்டியருளினர்.

காலமும் இடமும் நோக்கி நடிப்பார் பேச்சில் மயங்காது சிவசத்தி வழிபாட்டில் விநாயக குமர வணக்கத்தில் வழுவாது நின்று பிறவிப்பயனைப் பெற முன்னிற்பதே சாலச் சிறந்த முறையாகும்.

—:—

## நாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டி

எதிர்வரும் (19—11—62) கார்த்திகைத் திங்கள் 4-ம் நாள் நாவலர் பெருமான் நினைவுத்தினம். அந்தநாள் சைவத்தை வளர்க்க மட்டுமல்ல, அந்நிய ஆட்சியின் கீழ், அந்நிய மதத்தின் செல்வாக்கின் கீழ் மதிப்பிழந்து சீரழிந்துபோய்க் கொண்டிருந்த அதனை முதற்கடமையாக அவ்விடரில்நின்றும் மீட்டு உரம் நல்க உழைக்கவுஞ் செய்த ஓர் உத்தமரின் நினைவு நாள்!

ஆங்கிலேயஆதிக்கத்தில், ஆங்கில மோக ஆதிக்கத்தில் ஈழத் தமிழ்க்குலத்தால் தமிழ் மறக்கப்பட்டு, தமிழின் மகிமை மறக்கப்பட்டு, அளிக்கப்படவேண்டிய உயர்வு மறுக்கப்பட்டு, தமிழ்க் கலைகள், தமிழ்ப் பண்புகள், தமிழ் ஒழுக்க நெறிகள் எல்லாமே புறக்கணிக்கப்பட்டு வந்த நாளில், தன்னம்பிக்கை பொலியும் தவப் புதல்வனாய், தனிப்பெரும் மறவனாய், சான்றாண்மை வீரனாய்த் தோன்றித் தமிழ் முழக்கமும் சைவ முழக்கமும் செழிக்கச்செய்த தீரச் செம்மல் ஒருவரின் தியாகத் திருநாள்!

கோட்டை கொத்தளங்கள்! கோடிசுக போகங்கள் செல்வச் சீமான்கள் சகவாசம், செழுமைகுலவும் இன்பம் நிறைந்த இல்லற வாழ்வு இவற்றையெல்லாம் அனுயசமாக ஆக்கித்தர வல்ல அசாதாரண திறமை படைத்திருந்தும் இந்தச் சுயநலங்களையெல்லாந்தியாகஞ்செய்து, மறுத்துவிட்டு சைவத் தமிழ்ப் பணியில் ஒன்றிக்கலந்துவிட்ட நாவலரின் திருநாளை உண்மைச் சைவத் தமிழ்ப் பற்றுடையோர் திருவிழாவாக, ஈழத் தமிழர்களின் பெருவிழாவாகக் கொண்டாடுதல் வேண்டும்.

எண்ணற்ற சமய நூல்கள், தமிழ் இலக்கண விளக்கங்கள், சமய நிறுவனங்கள், அறிவுக் கூடங்கள் இவரது உழைப்பில் உருவாகிப் பயன் படைக்குஞ் செல்வங்கள். இன்று ஈழத்தில் பிரகாசிக்கும் அறிஞர் பலர் அன்னாரின் அடிச்சுவட்டில் — அறிவுப் பரம்பரையில் உருவாகிய வழித்தோன்றல்கள்.

தமிழ்மொழியில் பண்டு தொட்டுச் செய்யுள் வடிவில் மட்டும் பிறந்து வந்த இலக்கியங்கள், ஆய்வுளமுத்துரைகள் உரைநடையிலும் உதிப்பதற்குரிய புரட்சிப் பாதையின் கபாடந் திறந்து வைத்த புதுமை இவரின் தியாகவாழ்வு திரட்டித்தந்த முதன்மைப் பெருநிதியம்.

தமிழ்கூறும் நல்லுலகம் புகழ்கூறிப் போற்றும் இத்தகைய நம்நாட்டு நாவலருக்கு இந்துசாதனம் ஈழத் தமிழர்கள் சார்பில் இவ்வாண்டு உவந்து புரியும் நன்றிப் பணியாக,நினைவுக் கட்டுரைப் போட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதை மகிழ்ச்சியோடு அறியத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## இலவு காத்த கிளி போல!

☆

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: கரகரப்பிரியா :: தாளம்: ஆதி

பல்லவி

கந்தாசு கந்தாக திர்வே லவா
கயிலேச னுபதேசம் பேறுமே லவா (கந்)

அனுபல்லவி

சேந்தா மரைமேவும் செல்வியின் மருகா
தேவா திதேவா சிவ பால முருகா, (கந்)

சரணம்

உலகஇன் பங்களேன்றும் உண்டேன் றிருந்தேன்
ஊணுறக்க மில்லாமல் உழைத்து மெலிந்தேன்
இலவுக் கிளியைப்போல ஏமாந் தலைந் தேன்
ஈடேறத் தந்தாள் உன்தாள் இணைமலர்ப் பசுந்தேன்.(கந்)

### வேதாகமவியற் பாடசாலையின் ஆண்டுவிழா

மேற்படி பாடசாலை முதலாவது ஆண்டு நிறைவு விழாவும், அகில இலங்கைச் சைவசமயக் குருமார் சபையின் 13-வது ஆண்டு மகாநாடும் 20, 21-10-62 சனி ஞாயிற்றுக்கிழமைகளில் சித்தங்கேணியில் நடைபெற இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம
வாழ்கஅந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்
சுபகிருது ஞூ ஐப்பசி மீ
௩௨ வெள்ளிக்கிழமை

## சமயத்துக்கேற்றபடி சமய மாற்றம் (I)

இறைவன் உண்டு; அப்படி ஒன்றும் இல்லை; என்ற இந்த அடிப்படையிலே மனிதச் சால்பு தங்கியிருக்கின்றது. ஈசன் ஒருவன் உளன் எனக் கொள்ளும் மதங்கள் பலவாயிருந்தும் அவையெல்லாம் கடவுள் வழிபாட்டிலே கண்ணும் கருத்துமாக அமைந்துள்ளன. இவ்வாறு பலவேறு பிரிவுகளிருப்பினும் ஒன்றிலிருந்து இன்னென்றுக்கு மனிதன் ஆராய்ச்சியின் பயனக அல்லது அநுபவத்தின் விளைவாக மாறுவது நியாயத்துக்குப் பொருத்தமாயிருக்கலாம். ஆனல் உலக வாழ்க்கையிற் செல்வம் அரசியல் அதிகாரம் இன்னும் வேறுவகையில் ஆதிக்கம் என்பனவற்றை நோக்கிக் கொள்கைகளை மாற்றியமைக்கக் கூட்டங்கள் கூடிப் பரபரப்பை உண்டுபண்ணி மக்கள் மனநிலையை வேறுபடுத்துவது பண்பாகுமா என்ற கேள்வியை எழுப்புகின்ற நிகழ்ச்சி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதாகச் செய்திகள் கூறுகின்றன.

புத்தமதம் புகுந்தார்களாம் இருநூற்றைம்பது தமிழ் மக்கள். பழைய வரலாற்று வைபவங்களை நினைவூட்டும் நிகழ்ச்சியாயுள்ள இந்தச் செயலைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய கடமை எங்களுக்குண்டு. இந்த மதமாற்றஞ் செய்தவர்களுட் கத்தோலிக்க சைவ மதத்தினர் பெருந்தொகையினர் என்று சொல்லப்படுகின்றது. இவர்கள் மதம் மாற வேண்டிய காரணங்கள் யாவை? தலைமுறை தலைமுறையாக வந்த மத வழிபாட்டிலிருந்து விலகி இன்னெரு கொள்கையில் ஈடுபட எண்ணுகின்ற ஒருவர் உண்மையைக் கூறுதல் வேண்டும். இருந்து வந்த மதத்தின் பேருண்மைகள் பொய்த்துவிட்டனவா? அல்லது புகுந்த புதுக் கொள்கை தனி உண்மையுடையதென்று ஆராய்ந்து காணப்பெற்றதா?

அந்நியர் ஆட்சிக் காலத்தில் அரசியல் ஆதிக்கத்துக்காகச் சைவ சமயத்திலிருந்து விலகிக் கிறீஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் பலரின் விபரீதச் செயல்களை உண்மை நெறியில் உயர்ந்தோங்கிய சைவச் [illegible] ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் ஞானப்பிரகாச முனிவர் அவர்களும் கண்டித்து நிகழ்த்திய உரைகள் ஆற்றிய தொண்டுகள் தமிழகத்தை விழிப்புடனிருக்கச் செய்தன. வாழ்க்கைத் தேவைகளுக்காக மதம் மாறுவதும் குறைந்தது. புறநாட்டு வாழ்க்கைமுறை ஈழத்திற் புகுந்து விளைவித்த தீமைகளும் ஒருவாறு அற்றுப் போயின. சிங்களம் பேசும் மக்கள் அரசியலுணர்ச்சி பெற்றபொழுது பழையபடி புத்தமதத்திலேயே புகுந்தனர் என்றாற் பாரம்பரியமான மதப் பெருமையைப் பற்றி வேறு சொல்லுதல் வேண்டுமோ?

இவ்வாறிருக்கப் புத்த மத போதகர்களே தமிழ்ப் பேசும் மக்களை அம்மதத்தில் அணைப்பதென்றால் அரசியல் நோக்கமே இப்பொழுது நடைபெற்ற மத மாற்றத்துக்கு முக்கிய காரணமென்பது வெளிப்படையாகின்றது. தனியாக ஒருவன் நின்ற சமயத்தை விட்டு வேறுமதம் புகுவது என்றிருந்தால் அதைப் பற்றி நாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அரசியல் வேற்றுமையால் அல்லது ஆதிக்கம் பெறும் ஆசையினாற் பாரத நாட்டிலே அம்பேத்காரென்ற ஒரு தலைவர் ஆதரவாளர்களைப்புத்த மதத்திலும் இசுலாமிய சமயத்திலும் சேரும்படி செய்தமையை ஈண்டு நோக்குதல் நன்று. மதத்தையும் அரசியலையும் கலந்து மன மாற்றமடைகின்றவர்கள் ஈற்றில் ஈசனை மறந்தவர்களாய்க் கதியற்று நிற்பார்களேயன்றி சமய நெறியில் அமையமாட்டார்கள்.

சைவசமயத்தைப்பற்றி மட்டும் கூறும்பொழுது அது உலகப் பேரறிஞர்களால் ஒப்பற்ற உயர்ந்த மெய்ச்சமயம்என்று போற்றப்படும் நல்வழி ஆகையாற் சைவர்கள் வேறு மதங்களிற் புகவேண்டியஉண்மையான காரணங்கள் இருக்க மாட்டா என்பதை மட்டும் இப்பொழுது எடுத்துக் காட்டுகின்றோம்.

—0—

நல்லைக்கீர்த்தனம் — 19.

## முருகன்வரக்காணேனே!

*

**— யாழ்ப்பாணம் ந. வீரமணி —**

இராகம் : ஸாரங்கா : தாளம் : ஆதி

பல்லவி

புருவம் நெரியுதடி இருகண் நலியுதடி
முருகன் வரக்காணனே! — ஸகியே.

அனுபல்லவி

பருவம் ததும்புமெழில் பசும்மேனி கோதிக்குதடி
வருவான் வருவான்என்று வாசலில்நின்று பார்த்தேன்

சரணங்கள்

தேவயானையின் தமிழ்ப் பாவில்மெய் மறந்தானே?
தேவிவள்ளியின் தினைத் தேனில் மயங்கினனே?
ஜீவனெனது மையல் தாபமதைத் தீரானே?
சேர்ந்தணைந்தே யானந்தப் பேரின்பம் தாரானே?

மயிலிடம் சொன்னேனடி குயிலிடம் கூறினேன்நான்
வெயிலிலும் வெம்மைமிகும் வெண்ணிலவும் தூதுவிட்டேன்
ஒயிலான அன்னம்கிளி ஊதுதும்பி யனுப்பினேன்
அயிலேந்தி நல்லைவாழும் அறுமுகன் வழிபார்த்தேன்

## அணிந்துரை அரங்கம்

### நாடகமாலை

ஆசிரியர்: **ஐயன்ன**

வெளியீடு: சனசமூகநிலையம், கந்தரோடை.

விலை ரூ. 1-50.

சிறுகதை, நாவல், நாடகம் முதலிய பல்வேறு துறைகளிலும் அனுபவம் பெற்ற ஒருவரான, தேவன் யாழ்ப்பாணம் அவர்களின் முகவுரையோடு, சமயம், கவிதை, இலக்கியங்களுக்கு உரை எழுதுதல் ஆகிய துறைகளில் மூழ்கி ஈடுபட்டுவரும் திரு. ஐயன்ன அவர்களின் படைப்பாக வெளிவந்துள்ள நாடகமாலை சிறு நாடகத்தொகுப்பு ஈழத்தமிழினத்தின் கன்னிக் குழந்தை.

தினகரன் விவேகி முதலிய ஏடுகளில் வெளிவந்தவையும் வெளிவராதவையுமான 10 சரித்திர, சமூக நாடகங்களை உள்ளடக்கிவரும் இந்நூலில், மலர்ந்தது தவம், ரத்தபாசம், சீதனம், சந்தேகம் ஆகிய நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை. மூவர்ண அட்டை நவநாகரீகத்தின் படப்பிடிப்பாக இருக்கிறது. புத்தகத்தின உருவில் நீள அளவைக் குறைத்துக் கையடக்கமாக வெளியிட்டிருந்தால் வாசகர்களுக்கு வசதியாக இருந்திருக்கும். மொத்தத்தில் ஈழத்தில் தமிழ்க்கலைகளும், தமிழ் மொழியும் தக்கவகையில் வளர்ந்துவரப் படியமைக்க வேண்டும் என்ற நல்விருப்பு-நியாயமான ஆவல் உள்ளவர்கள் பணங்கொடுத்து வாங்கிப் படித்துப் பயன்படுத்த வேண்டிய நூல்,

——

## துறவுச் சோதனை

**[ முகாந்திரம் E. P. இராசையா J p. ]**

"சுகுமாரன்" ஓர் அரசனின் ஏகபுத்திரன். அன்பு, அறிவு, ஆற்றல், தியாகம் போன்ற நற்பண்புகள் அமையப்பெற்றவன். "இறைகளோடிசைந்த இன்பம் எதுவோ— அதுவே இன்பத்தோடிசைந்த வாழ்வு" என்று மனதிற் கொண்டான் சகல அரச போகங்களையும் துறந்து, கானகமேகினன்; கடுந்தவம் புரிந்தான்,

"யான் பெற்ற இன்பம் பெறுக, இவ்வையகம்" — என்ற 'திருமூலர்' வாக்கை எண்ணி மனிதகுலம் ஈடேறும் வழியைப் போதிக்கத் தொடங்கினர், இத் 'துறவி'.

"மனித சமுதாயம் ஆசைக்குப் பலியாகி அழிந்து போகாமல், இறைகளோடிசைந்த இன்ப வாழ்க்கையே—ஈடேற்றப் பாதை" என்ற உண்மையை ஊர் ஊராகச் சென்று போதித்து வந்தார்.

ஆடவரும், பெண்களும், முதியோரும், இளைஞரும் அவருடைய கருத்தைப் பின்பற்றினர். சிலர் அவரின் சீடராகி, அவருடன் பிரசாரத்தில் ஈடுபட்டனர். நீண்ட பரிசோதனையின் பின்பே சீடராவோரை ஏற்றுக் கொண்டார்.

குருநாதர் ஓர் ஊரில் தங்கியிருக்கும்பொழுது, அழகும், இளமையும் பொருந்திய வாலிபன் ஒருவன் அவர்முன் வந்து வணங்கினன். "மங்களமுண்டாகட்டும், மகனே! உன் எண்ணம் யாதோ?" எனக் குருநாதர் வினவினர்,

"சுவாமி! என்னையும் தங்கள் சீடர்களில் ஒருவனக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று ஆனந்தன்என்ற அந்த வாலிபன் கேட்டான். "குழந்தாய்! நீ அழகும், இளமையும் உள்ளவன். ஆகவே, இவ்வயதில் துறவறம் பூணவோ, கடுமையான சீடர் குழுவில் சேரவோ சாத்தியப்படாது. எவ்வளவு மன உறுதியிருந்தாலும், உனது இளமையும், அழகும் சத்துருக்களாகி அதைக் குலைத்துவிடும்" என்றார் குருதேவர்.

"என் மன உறுதியை ஒன்றும் குலைக்கமாட்டாது. "இளமையும் நில்லா; யாக்கையும் நில்லா" என்பதை உணர்வேன்.

"நில்லாதவற்றை நிலையின
என்றுணரும்
புல்லறிவாண்மை கடை"

என்பது 'வள்ளுவர்' வாக்கு. ஆதலால், தங்களின் தத்துவமே இலட்சியமாகக் கொண்டு — எந்தக் கடுமையான கட்டுப்பாட்டையும் அனுசரித்து, மனதை அடக்கி நடந்துகொள்வேன். என்னையும் சீடனக ஏற்றுக்கொள்ள வேண்டும் தேவா! என்று மன்றாடினன்.

குருநாதர் புன்சிரிப்புடன், "சரி! என்னுடன் இங்கு தங்கியிரு, பின் முடிவு சொல்கிறேன்" என்றார்.

"பண்டையூர்"என்னும்கிராமத்துக்கு இவர்கள் யாபேரும் ஒரு பிரசாரக் கூட்டத்துக்குப் போயிருந்தார்கள். கூட்டம் முடிந்தபின் ஆனந்தன் விலகி ஓர் மரத்தடியில் தனிமையாயிருந்தான். அவ்வழியால் கூட்டத்துக்கு வந்த ஆண், பெண் அனைவரும் வீடு திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்கள். அதில் ஓர் சிவப்பு ஆடை தரித்த பெண்ணின் நடை, உடை, சிரிப்பு யாவும் அவன் மனதைக் கவர்ந்தன. அவன் இமைகொட்டாது அவளையே பார்த்தபடியிருந்தான்.

"யாரை அவ்வளவு ஆசையுடன் பார்க்கிறாய் ஆனந்தா?" என்ற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான். பின்னல் குருநாதர் நிற்கக்கண்டு, முதற்சோதனையிலேயே தவறிவிட்டேனே யென்று வெட்கத்தாலும், பயத்தாலும் தலைகுனிந்து நின்றான். குருநாதர் அவனை அன்புடன் தழுவி, "உன் மனம் துறவறத்தையடைய இன்னும் பக்குவப்படவில்லை, ஆனந்தா! எவளிடம் உன் மனம் ஆசைப்பட்டதோ, அவளுடன் ஓர் ஆண்டு நீ சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பு. உன் மனநிலை தடுமாறுதிருக்குமானல், நீ எனது சீடனகத் தகுதியுள்ளவனவாய்".

குருநாதரின் கட்டளைப்படி ஆனந்தனும் அவ்விளமங்கை சுகுணவுமாகப் புறப்பட ஆயத்தம் செய்தார்கள். புறப்படுமுன், குருநாதர் அவனை மீண்டும் எச்சரித்தார்:- "இது உன் சோதனைக்காலம். உன்னுடன் வரும் பெண் நெருப்பு. அந்த நெருப்பின் முன் உன் மனம் மெழுகுபோல் உருகிவிடாமல் இருக்குமாகில் — நீ எனது சீடனகத் தகுதியடைவாய். அதற்காக, அந்த நெருப்பை, நீர் ஊற்றி

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

இவ்வாரம் (21-10-62 — 27-10-62)

## உங்கள் பலன்?

**[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]**

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தாயாரின் உடல்நிலைதொடர்ந்து ஊறுபட்டிருக்கும். வாகன மூலமான சச்சரவுகளும் ஏற்படும். ஆனல் தொழிலளவில் நல்ல வாரம். பண இலாபங்கள்நிச்சயம்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

நிலபுலங்களால்இலாபமுண்டு. எதிரிகளுக்கு இன்னல்களும் ஏற்படும். ஆனல் சிறுசிறு குடும்பத் [illegible] வழிஉறவினரால்தொல்லை உண்டு.

மிதுனராசி மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

இனத்தவருடனும்நண்பர்களுடனும் சச்சரவுகளுக்கு இடமுண்டு பணமளவில் நல்லவாரம், கல்வியில் முன்னேற்றம் உண்டாம். குடும்பநிலை திருப்தியாயிருக்காது.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

தொடர்ந்து குடும்பநிலை குழப்பமாக இருக்கும். உடல் நிலையும் ஊறுபடும், ஆனல் பண நிலை திருந்தவேண்டும்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
வழ. இல. M.B. 4438.
மாதகல் மேற்கு
1. பறநாந்து தொம்மைப்பிள்ளை யும், மனைவி
2. இஸ்திரம்மாவும்
—வழக்காளிகள்.

எதிராக:
மாதகல் வடக்கு
1. நாகமுத்து விநாயகமூர்த்தி யும், மனைவி
2. சரஸ்வதியும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4438-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக காணிகள் 1962-ம்ஹூ நவம்பர்மீ 10உ (10 – 11 – 62) சனிக்கிழமை மூற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-மூதல்வட்டி ரூபா 2012-50 சதம். மேலும் 1500/- ரூபாவுக்கு 7-12-61 திகதி தொடக்கம் 15-6-62 திகதிவரைக்கும் வருடமொன்றுக்கு 10%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கு இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வீத வட்டியும் கோட்டுச் செலவு 240 ரூபா 90 சதம்.

காணிகள் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை "கொட்டைக்காடு" நெற்பரப்பு 7. இதற்கு எல்லை கிழக்கு K. வயித்திலிங்கத்தினுதனம், வடக்கு வயித்திலிங்கத்தின் மனைவி தெய்வானையினுதனம், மேற்கு V. விசுவரினதும், V. இராமுப்பிள்ளையினதும் ஆதனம், தெற்கு K. சிதம்பரப்பிள்ளையினுதனம். இது முழுவதும் இதுடன் மேற்கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றிலிருந்து வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்,

2. ஷை மாதகல் இறை "கொட்டைக்காடு" நெற்பரப்பு $8\frac{1}{4}$; பனைகளும். இதற்கு எல்லை கிழக்கு ருேட், வடக்கு K. வயித்திலிங்கத்தினுதனம், மேற்கு K. வயித்திலிங்கத்தினதும், K. சிதம்பரப்பிள்ளையினதும் ஆதனம், தெற்கு T. கணபதிப்பிள்ளைக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், இது முழுவதும்,

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனரும்,
விலைமதிப்பாளரும்.
643 காங்கேசன் துறை விதி,
யாழ்ப்பாணம் 29-9-62.
M. 145 19-10-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுளிபுரம் தாமோதரம்பிள்ளை
சங்கரப்பிள்ளை —வழக்காளி,

இல. M B 3578

எதிராக
பாசையூர்
1. இயோ இராசேந்திரமும் பெண்
2. அன்சிலினுவும்,
-எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3578 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுச் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1962-ம் ஹூ கார்த்திகைமீ 10 உ சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: மூதல்வட்டி ரூபா 1470ம் 26-8-60 தொடக்கம் 21-12-60வரைக்கும்ரூபா1000க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 166-77 சதமும் மூதல்வட்டி ரூபாயில் 650 கொடுபட்டு இருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளி இறை ஈக்கன் தறை' பரவிலஇலா (1)ஒன்றும் கல்வீடும் கடை கட்டிடங்களும் செய்பயிர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுண்டிக்குளி
39, ஓல்ட் பாக்ருேட்
சாமூவேல் பென்ஜமின்
வழக்காளி

இல. M B 1061

எதிராக
சுண்டிக்குளி மூளாய்ருேட்
1, ஜேக்கப் ஞானப்பிரகாசம் கைம்பெண் மேர்ப்பிள்ளை இவ தனக்காகவும் தனது காலஞ்சென்ற கணவரின் ஆதனத்தின் உரிமைத் தத்துவகாரியாகவும்.
சுண்டிக்குளி ஓல்ட்பாக்ருேட்
2. மடத்தின் கபிறியலும் பெண்
3. செல்லமுத்துவும்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1061 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1962 ம் ஹூ கார்த்திகை மீ 17உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-மூதல்வட்டி ரூபா 1380-ம் 28-9-56 தொடக்கம் 20-12-56 வரைக்கும் ரூபா 900 க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் மூதல் வட்டி ரூபாயில் ரூபா 500 கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று கரையூர்இறை 'செம்பன்புளியடிவயல்' பர.நெல்.இலா(4)நாலும்கல்லால் கட்டிய அத்திவாரமும், கிணறும் அதைச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு சவிரிமுத்து யோசேப் பெண் எலிசபெத்துக்குரிய ஆதனம். வடக்கு ருேட்டு. மேற்கு ஆறுமுகம் வேதநாயகத்திக்கும் பெண் லூதம்மாவுக்கும் உரியஆதனம். தெற்கு சிசில் சலினு ஆசீர்வாதத்துக்குரிய ஆதனம்.

அ. ஜெகநாதன்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
16A, அம்மன் ருேட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
M 141, 19-10-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அச்சக ஓழுங்கை – சுண்டிக்குளி
அந்தோனிப்பிள்ளை யோசெப்
வழக்காளி.

இல, M B 4437

எதிராக
சின்னவிளான் செல்லையா கைம்பெண் சின்னம்மா (மேற்பார்த்து சிவஞானம் - புகையிரதஸ்தானம் சிலாபம்)
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4437-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1962ம் ஹூ கார்த்திகை மீ 10 ம் தேதி சனிக்கிழமைபிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-மூதல்வட்டி ரூபா 1900 உம் 7-12-61 தொடக்கம் 15-6-62 வரைக்கும் ரூபா 1500 க்கு 10வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 238-05 சதம்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோயிற்பற்று சின்னவிளான் இறை.

வான்பயிர்களும். எல்லை கிழக்கும் வடக்கும் இளிமென் லொறன்சுக்கும் பங்காளருக்குமுரியஆதனம். மேற்கு ருேட்டு. தெற்கு றபீல் முத்துராசாவுக்குரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் குளி (6¾ம்) குறித்த வீட்டில் மேற்குப்புற அறையும் இவர்களின் நிந்தமாய் கட்டிய புதுக்கடைக் கட்டிடமும் மலசலகூடமும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்.
16 A. அம்மன் ருேட்,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்,
M. 140 19-10-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M B 2185
யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வட்டுக்கோட்டை கிழக்கு
சிதம்பரப்பிள்ளை செல்லப்பா கைம்பெண் நாகம்மா
— வழக்காளி.

எதிராக
வட்டுக்கோட்டை.
தற்போது
வண்ணுர்பண்ணை கிழக்கு
இறந்தவர்
(1) மயில்வாகனம் அப்பாசாமி மயில்வாகனம்
வட்டுக்கோட்டை கிழக்கு
(2) மாரிமுத்தர் ஆறுமுகம் நாராயணசாமி
(3) பெண் மனேன்மணி
(4) ம. அ. மயில்வாகனம் கைம்பெண் கண்மணி
முதலாம் எதிரிக்காக.
- எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 2185ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணி 1962ம் ஹூ கார்த்திகைமீ 27 ங்உ செவ்வாய்க்கிழமை (27-11-62) மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-மூதல்வட்டி ரூபா 3620 சதம் 25, இன்னும் ரூபா 3000-த்திற்கு 8-5-58 தொடக்கம் 1-9-58 வரையும் 100-க்கு 9% வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 100-க்கு 5%வட்டியும் கோட்டுச்செலவு 219 ரூபா 55 சதமும், கொடுபட்ட ரூபா 150-ம் 21-9-61 ல் கட்டப்பட்ட ரூபா, 3000/-

காணி விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுககோட்டை கோயிற்பற்று, வட்டுக்கோட்டை மேற்கிறை "செட்டி சிட்டி" இது குறித்த யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 4131-ம் இலக்கப் பிரிவிடுதல் வழக்கில் சேவையர் சே. டி. வீரசிங்கம் என்பவரால் 1949-ம் ஆண்டு ஆனிமாதம் 1°-ந் திகதி அளக்கப்பட்ட 2470-ம் இலக்கப் பிளானில் கண்டிருக்கிறபடி அதில் நான்காம் லொட் என்று குறிப்பிட்டிருக்கும் துண்டு. இதன் விசாலம் பரப்பு நில. இலாச்சம் மூன்றும், குளி ஏழும் பதினுறில் மூன்று பங்கும், கல் விடுகளும், மாற்கொட்டிலும், கிணற்றில் அரைவாசியும், வான் பயிர் செய்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு கண்ணகியம்மன் கோயிலுக்குரிய ஆதனம், வடக்கு வயிரவசுவாமி கோயிலுக்குரிய ஆதனம்: குறித்த பிளானில் சொல்லப்பட்ட 2ம், 3-ம் துண்டுக் காணிகளும். மேற்கு குறித்த பிளானில் சொல்லப்பட்ட 3-ம்,

(தாண்டிச்செங்கூடலும், கிராயடியும்) பர. நில. இல, $16\frac{1}{4}$. இதில் சொரியலாய் பர. நில, இலா $11\frac{1}{2}$ யும் செய்பயிர், வான் பயிர்களும் ருேட்டுக்கரையில் வட மேற்கு எல்லையிலிருக்கும் கிணற்றின் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புஉரித்தும். எல்லை கிழக்கு சபாபதி பெண்சேதுப்பிள்ளைக்கும், பொன்னையா பெண் பிலிப்பாச்சிக்கும் உரியஆதனம். வடக்கு செல்லையா பெண் சின்னப்பிள்ளைக்கும் A. முருகேசுவுக்கும் R. சின்னத்தம்பிக்கும் உரிய ஆதனம். மேற்கு K. அருணசலத்திற்கும் பெண் பூபதிக்கும் கீழே சொல்லப்படுகின்ற இரண்டாம் ஆதனமும். S. செல்லப்பாவுக்கும் கையொழுங்கையும்.

(2) மேற்படி இறை (தாண்டிச்செங்கூடல்) பர. நில. இலா $5\frac{1}{2}$. செய்பயிர் வான் பயிர்களும், வழிவாய்க்கால்பாவிப்புரித்தும். தேன் மேற்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும். எல்லைகிழக்கும்வடக்கும் மேலே சொல்லிய மூதலாவது ஆதனம். மேற்கு S. செல்லப்பாவின் ஆதனம். தெற்கு S. யோசேப்புக்கும்மனைவிக்கும்உரிய ஆதனம். இதடங்கலும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்.
16 A, அம்மன் ருேட்,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M. 142 19-10-62

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி வடக்கு
1. சிவசாமிக்குருக்கள் யோகீஸ்வரசர்மா
2. பெண் அன்னலட்சுமி அம்மாள்
—வழக்காளிகள்.

இல. 2208.

எதிராக
சாண்டாம்போக்கட்டி
கந்தையா சங்கரப்பிள்ளை
—எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 2208-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1962-ம்ஆண்டு நவெம்பர் (கார்த்திகை) மாதம் 21 – ம் திகதி (21-11-62) புதன்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-மூதல்வட்டி ரூபாய் 1352-21ம், இதில் ரூபாய் 1000/-க்கு 5-6-61 திகதி தொடக்கம் 30-10-61 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும், பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வித வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 266-50 சதம். இதில் ரூபா 200/- இறுபட்டது,

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி வரணிக்கோவிற்பற்று தாவளையற்றுலையிறை "குருவீச்சம்புலம் தோப்பும், மறுபிரிவுகளும்" கயிலன்புலம்தோப்பும் மறுபிரிவுகளும். நிலப்பரப்பு 26 5/8-ம். எல்லை கிழக்கு ருேட்டு. வடக்கு இருவனிற்பிள்ளையார்கோவில் ஆதனமும் குளமும், மேற்கு ஆறுமுகம் கதிரேசருக்கும் பக்காளருக்குமுரிய ஆதனமும் வாய்க்காலும். தெற்கு வாய்க்கால். இதடங்கலும் அதற்குட்பட்ட பயிர்களும். மூற்பதிவு F 124/222.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer,
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 15-9-1962.
M. 149, 19-10-62.

1-ம் துண்டுக்காணிகள். தெற்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் இராமாசிப்பிள்ளைக்குரியஆதனம். இந்த எல்லைப்படி இதடங்களும், இதைச்சேர்ந்தவைகள் அனைத்தும்

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 9-10-62.
M 153 19-10-62

## வரப்பெற்றேம்

=0=

மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலைத் தலைமை யாசிரியர் திரு. மு. சின்னத்தம்பி அவர்கள் பிரிய பத்தினி பதஞ்சலி அம்மாள் மறைவைத் தொடர்ந்து சென்ற 16-10-62 செவ்வாய்க்கிழமை அந்திய கிரியைகள் சைவ முறைப்படி சிறப்புற நிகழ்ந்ததை முன்னிட்டு திரு. மு. சின்னத்தம்பி அவர்கள் சைவ பரிபாலன சபைக்கு வரித்தனுப்பிய ரூபா 2-ம் வரப்பெற்றேம்.

—அதிபர்.

## பொற்கலன்பை வயிரவசுவாமி கோயில் மானம்பு

சென்ற விசயதசமியிலன்று (8-10-62) திங்கட் கிழமை மாலை மேலைத்தெல்லி விழிசிட்டிச் சிவகுருநாதசுவாமிகள் அடியார்கள் கூட்டம் புடைசூழ மங்கல வாத்தியங்கள் ஒலிக்க மேற்படி வைரவசுவாமி கோவிலுக்கு எழுந்தருளியிருந்து அலங்காரபூசைகள் பிரார்த்தனைகள் செய்யப்பெற்று ஊர்வலமாய்உரிய ஆலயத்தை அடைந்தருளினுர்கள்.

## இவ்வாரம் உங்கள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்காரசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தொடர்ந்து எதிரிகளைவெல்வீர். புதுமுயற்சிகள் வெற்றி அளிக்கும் ஆனுல் செலவுகள் பெருகும். கண்ணேய்களுக்கு இடமுண்டு,

கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

நிலபுலங்களால் இலாபம் உண்டாம். சகோதர சகோதரியர் மிக உதவுவர். ஆனுல்மனநிம்மதிஇருக்காது.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

வழமையிலும் வேலை கூடும் ஆனுல் போதியளவு ஈடுசெய்யப்படுவீர். புகழும் சமூகவெற்றியும் உண்டாம். உடல்நிலை சிலகாலத்திற்கு ஊறுபட்டிருக்கும்.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

எதிர்ப்பாலைச்சேர்ந்தநண்பர்கள் மிக உதவியாக இருப்பர். உடன்பிறந்தோர்களின்சலுகைகளுடன் விவசாய முயற்சிகள் வெற்றி பெறும். தந்தையாரின் உடல்நிலை பாதிக்கப்படும்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

ஞாயிறும் திங்களும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும். வார மிகுதிப்பகுதி வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்றதாக இருக்கும். மன அமைதி இருக்காது.

மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,


உடல்நிலை திருப்தியாயிருக்காது. குடும்பக்குழப்பங்கள் தொடரும், திங்கள் மாலையையும் செவ்வாய் புதனையும் எச்சரிக்கையோடு கழிக்கவும். வார மிகுதிப் பகுதி பண வருவாய்க்கேற்றது.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

மூற்பாதி வாரம் வாணிபப் பரிமாறல்களுக்கு ஏற்றது. எதிர்ப்புக்கள் கரைந்துவிடும். தந்தையாருக்குச் சுகவீனம் ஏற்படும். வியாழன் மாலையையும் வெள்ளி சனியையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

வயிற்றுக்குழப்பம் தொடரும். மன நிம்மதி இருக்காது. பணமளவில் நல்ல வாரம். விவசாய முயற்சிகளில் இலாபம்உண்டாம்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


# துறவுச் சோதனை

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

அணைத்துவிடக்கூடாது, எக்காரணம் பற்றியும் சுகுணாவின் மனம்நோக நீ நடந்துகொள்ளவுமாகாது."

"தங்கள் சொற்படி நடப்பேன்" என்று கூறி, அவன் விடை பெற்றான். காவி வஸ்திரத்துடன் ஊர் ஊராகச் சென்றனர், பிரயாணம் தொடங்கி ஒரு மாதத்துக்கு முன்னமே ஆனந்தனின் சோதனைக்காலம் ஆரம்பமாயிற்று.

"இன்னும் உங்கள் மனம் இரங்கவில்லையா?" என்று சுகுணா ஒருநாள் ஆரம்பித்தாள். "என்னைச் சோதித்தது போதும், சகோதரி" என்றான் ஆனந்தன்.

'சோதனையல்ல, என் அன்பனே! பிரேமையின் சமர்ப்பணம். சற்றே என் உள்ளத் துடிப்பை உங்கள் அகக்கண்களால் பாருங்கள் ஆனந்தா!! வாலிபப் பருவத்திலிருக்கும் நமக்கும் துறவுக்கும் வெகு தூரம். உங்கள் சுருண்ட மயிரும், அழகும் என் காதல் தீயைக் கொழுந்துவிட்டெரியச் செய்கின்றன. அதை என்னால் தாங்க முடியவில்லையே" இது சுகுணாவின் வேண்டுகோள்.

'போதும், சுகுணா! உன் பேச்சைக் கேட்க என்னால் சகிக்கமுடியவில்லையே. அநித்தியமான உடலின் அழகில் ஆசைப்படுவது பேதைமையல்லவா?

"என்னை மயக்கிய உங்கள் அழகிய சிகை உருமாறி நரைத்துப் போகக்கூடியது. எனினும், அழுகுமுன் கனியைப் புசித்துவிடுவதல்லவா அறிவாளியின் செய்கை? அதுபோல், உங்கள் அழகை மூப்பு மூடி அழிக்குமுன்பு அவற்றை அனுபவித்துப் பார்க்க என்மனம் துடிக்கின்றது" என்று கெஞ்சினாள் சுகுணா.

'ஐயோ! சுகுணா, ஏனிப்படி என் மனோ தைரியத்தைக் கெடுக்கிறாய்?"

'ஆனந்தா! குருநாதர் எமக்குக் கடைசியாகச் சொன்னதைச் சற்று நினைத்துப்பாருங்கள். என் மனம் நோகத் தாங்கள் நடந்துகொள்ளலாகாது என உபதேசித்து அவர் அனுப்பவில்லையா?'

"ஆம், சுகுணா, ஆனால் நீ விரும்புவது ... .... ... ..."

"ஆம். நான் விரும்புவது- என் மனத்தைக் கவரும் உங்கள் அழகிய கறுத்தச்சுருண்ட மயிர் ... ... ... ... ...."

"போதும், சுகுணா! எனக்குச் சற்று யோசிக்க அவகாசம்கொடு. நாளைக்காலை......."

"என்ன வரக — ஒருநாளல்ல; ஒரு மாதம் வேண்டுமானாலும் தருகிறேன்" என்றாள் சுகுணா.

மறுநாள் சுகுணா நித்திரை விட்டெழுந்து வெளியே வந்த போது, ஆனந்தனைமொட்டை அடித்த தலையுடன் கண்டு திடுக்கிட்டாள்.

"ஐயோ! இதென்ன? உங்கள் அழகின் அறிகுறியாயுள்ள சிகையை அகற்றிவிட்டீர்களே, சுவாமி!" என்று அலறினாள் சுகுணா.

"ஆம், பிறர் இச்சிக்கும் பொருளைத் தன்னிடத்தே வைத்துப் போற்றுபவன் துறவியாகமுடியாது. இதோ! நீஆசைப்பட்ட அப்பொருள்" என்று வெட்டிய மயிரை அவள் முன் போட்டான் ஆனந்தன்.

"சிகையை வெட்டினால் இளமை மாறிவிடுமா? இந்தக் கோலத்திலும் உங்கள் கருவிழிகள் என்னை மயக்குகின்றதே!"

"அந்தோ! இன்னுமா உன் மனம் தடுமாறுகிறது? இது என்னகடுஞ்சோதனை,தேவா!' என்று புலம்பிக் கொண்டு அந்தப்புரப் பக்கமாகப் போனான். ..............

ஒருவருடமாயிற்று. அந்தப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு அவ்விருவரும் குருநாதர் ஆச்சிரமத்தை வந்தடைந்தனர்.

தம்மை வணங்கி எழுந்த ஆனந்தனைப்பார்த்துத் திகைப்புடன் குருநாதர்வினவினார்:- 'ஆனந்தா! இதென்னகோலம்? உன் சிகையெங்கே; உன் அழகிய கருவிழிகள் எங்கே?"

"என் துறவுக்கு இடராக நின்ற அவற்றையெல்லாம் அகற்றிவிட்டேன், சுவாமி, அந்தப்புறக்கண்களின் அழகை இழந்த பின்னர்தான் எனது அகக் கண்கள் திறந்தன; ஞான ஒளி கிட்டியது!"

கருணையே உருவாகிய குருமூர்த்தி முகமலர்ச்சியுடன்

"சோதனையில் வெற்றி, பெற்றுவிட்டாய், ஆனந்தா! நீயே துறவி! இனி நீ என் பிரதம சீடன்!!!" என்றார்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

குருசாமி செட்டி
நாகலிங்கம் செட்டியார்
சுன்னாகம்.

இல. M.B. 4044.

காலஞ்சென்ற சின்னாண்டி செட்டி இரத்தினம் செட்டி ஆதனங்களிற்கு 775-ம் மரண சாதனத் தத்துவ வழக்கில் மரண சாதனத் தத்துவகாரனாக நியமிக்கப்பட்டவர். —வழக்காளி,

எதிராக

1. செல்லையா தருமலிங்கம்
2. தருமலிங்கம்பெண் நல்லம்மா
புங்குடுதீவு மேற்கு,
—எதிரிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B, 4044-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1962-ம் ஆண்டு மார்கழிமாதம் 1-ம்உ (1-12-62) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- ரூபா 4766, 1-6-61 தொடக்கம் 25-9-61 வரையிலும் ரூபா 2500-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக அறவிடும் வரையில் முழுத் தீர்வைத்தொகைக்கு 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 221-36 ம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் தீவுப்பகுதி புங்குடுதீவு கோயில் பற்று புங்குடுதீவு மேற்கு இறை "எலி அளகன்புலம்" நில. பரப்பு 60-ல் தென்மேற்குப் புறமாக அறுதியாக விற்ற நிலப்பரப்பு 10 ஐயும் நீக்கி மிகுதியான பரப்பு 50-ம் செய்பயிர் வான்பயிர்களும் வீடும் கிணறும். நிந்த நிலப் பரப்பு 50-ற்கு எல்லை கிழக்கு "பட்டயகாரன் வளவு" அம்மன் கோவிலுக்கும் முதலாம் எதிரிக்கும் மறுபெயர்களுக்குமுரிய ஆதனம். வடக்கு அருணாசலம் அம்பலத்திற்கும் பங்காளர்களுக்கும் மறுபெயர்களுக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கையும் குமாரு கனகலிங்கத்தினது ஆதனமும். தெற்கு குமாரு கனகலிங்கத்திற்கும் மறுபெயர்களுக்குமுரிய ஆதனம், இதடங்கலும்,

க. செல்வத்துரை,
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்,

"முருகன் இல்லம்"
இணுவில், 17-10-62.
M 155 19-10-62.


## நாவலர் நினைவு ... ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தருகின்றோம். போட்டி இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

1. மாணவர் பிரிவு.
2. மற்றையோர் பிரிவு

ஒவ்வொரு பிரிவிலும் முதன்மைபெறும் மூவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும். அவர்களின் அந்தக் கட்டுரைகள் இந்துசாதனம் வைரவிழா மலர் சஞ்சிகையில் அவர்கள் புகைப்படங்களுடன் வெளியிடப்படும்.

### தலைப்புகள்

1. தேவையும் நாவலர் சேவையும்.
2. நாவலர் செயல்வன்மை.
3. நாவலரும் பழந்தமிழ்நூல்களும்.

ஏதாவதொன்றைப்பற்றி (Foolscap) தாளில் 4 பக்கத்திற்குட்படாமலும் 8 பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதி 20-11-62 க்கு இடையில் இந்துசாதனம் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நடுவர்கள் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக கோட்டில்
இல. M B 3726
நாரந்தனை
(1) E. ஐயாத்துரையும்
அவரின் மனைவி
(2) நாகம்மாவும்
- வழக்காளிகள்.

எதிராக

நாரந்தனை
கிறிஸ்தோப்பிள்ளை பேதுறுப்பிள்ளை
- எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3726-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1962ம் ஹூ கார்த்திகைமீ 2ம்உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1039-73ம் 3-11-60 தொடக்கம் 1-2-61 வரைக்கும் ரூபா 700 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 177-52ம் கோட்டுச் செலவில் ரூபா 100 கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக்கோவிற்பற்று நாரந்தனை இறை "ஏற்று மண்குளத்துக்குத் தெற்குக் கலட்டு" நெற்பரப்பு 10, குழி 10 இல் மேற்குப் பக்கமாக அறுதி விற்ற நெற்பரப்பு 5 குழி, 5 நீக்கி மீதி நெற்பரப்பு 5 குழி 5ம் கிணறும். இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு தெரு மேற்கு கிறிஸ்தோப்பிள்ளை பெஞ்சமினின் ஆதனம். தெற்கு மேற்கூறப்பட்டுள்ள எதிராளியின் ஆதனம் இதடங்கலும் இது முழுவதும்.

C 239/138 - இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

அ. வெற்றிவேலு
கொமிஷனர்.

19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 9-10-62.
M. 156 19-10-62.


## கணக்குப் பார்க்கத் தெரியாதாம்...!



பெரியவர்: இங்கிலாந்துப் பத்திரிகை இலங்கையிற் சிறிமாவின் ஆட்சியைப்பற்றிக் கண்டித்திருக்கின்றதாம், விபரம் தெரியுமா?

விகடன்: அப்படிப் பிரமாதம் ஒன்றுமில்லை, வரவு செலவு கணக்குப்பார்க்கத் தெரியாத அரசாங்கம் என்று சொல்லித் தமிழினத்திற்குத் தீங்கு செய்யும் ஆட்சியென்றும் சொல்லியிருக்கிறது பெரியவர்.

பெரியவர்; தமிழினத்தைப் பகைத்தாற் கணக்குச் சரிவராதுதானே!

## இந்துசமய விருத்திச்சங்க 4-ம் ஆண்டு நிறைவு விழா

ஏழாலை தென்மேற்கு இந்து சமய விருத்திச் சங்கத்தின் 4-ம ஆண்டு நிறைவு விழா 14-10-62 ஞாயிற்றுக்கிழமை மாலை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இளைப்பாறிய ஆசிரியர் திரு. மு. சிற்றம்பலம் அவர்கள் தலைமையில் செல்வன் இ. தங்கவேலு "ஆறுமுகநாவலர்" என்னும் விடயம்பற்றியும், செல்வன் சி. இமயகாந்தன் "மாணிக்கவாசக சுவாமிகள்" என்னும் பொருள்பற்றியும், திரு. தா. சண்முகநாதன் "சமயமும் வாழ்க்கையும்" என்னும் பொருள்பற்றியும், திரு.மு. சண்முகநாதன் (சான்று ஆசிரியர்) "நாஸ்திகம் கண்ட தோல்வி" என்னும் விடயம் பற்றியும், பண்டிதர் திரு. இ. நமசிவாயம் "சைவநெறி" என்னும் பொருள்பற்றியும் முறையே பேசிச் சபையோரை மகிழ்வித்தனர்.

## கருத்துக் கலசம்

எனது இன மொழியை இன்னொரு இன மக்கள்மீது திணிப்பதை நான் விரும்பவில்லை. —வில்மட்பெரேரா.

x x x

இந்த நேரத்தில் மதமாற்றஞ் செய்வதும், செய்யத் தூண்டுவதும் முற்போக்கான செய்கையென்று எண்ணினால் அது தன்னைத்தானே ஏமாற்றியதாகவே முடியும்.

—கே. நடராசா.

x x x

(இலங்கையில்) பண்டாரநாயக்கா அரசாங்கம் ஊக்கம் காட்டிவரும் ஒரேயொரு விஷயம் சிங்கள இனத்தின் புராதன கலாச்சாரத்தை வளர்ப்பதுதான். இதன் விளைவாகக் கடின உழைப்பாளிகளான தமிழர்கள் மேலும் மேலும் தீவிர போக்கில் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

— இலண்டன் தினத்தந்தி

x x x

விவசாயிப் பெருமக்கள் தங்கள் முன்னேற்றத்தை மட்டுமன்றி நாட்டின் முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு செயலாற்றவேண்டும். நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு படித்த இளைஞர்களும் முன்வரவேண்டும்.

— திருமலை அ. அதிபர்


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம், பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 19-10-1962 [illegible] அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org